தினமணி

## பணவீக்க விகிதம் 6.95% ஆக உயர்வு

First Published : 15 Mar 2012 12:00:00 AM IST

புது தில்லி, மார்ச் 14: நாட்டின் பணவீக்க விகிதம் பிப்ரவரி மாதத்தில் 6.95 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பணவீக்க விகிதம் 9.54 சதவீதமாக இருந்தது. பணவீக்க உயர்வுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் உற்பத்திப் பொருள்களின் விலை உயர்வே முக்கிய காரணமாக அமைந்துள்ளது. குறிப்பாக உணவுப் பொருள்களில் காற்கறிகளின் விலை உயர்வு பணவீக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜனவரியில் காற்கறிகளின் விலை 43.13 சதவீதம் குறைந்தது. ஆனால் இது பிப்ரவரி மாதத்தில் 1.52 சதவீதம் அதிகரித்தது. பால், இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலை 20 சதவீதம் உயர்ந்தது. உற்பத்திப் பொருள்களில் இரும்பின் விலை 15.82 சதவீதமும், அடிப்படை உலோகங்களின் விலை 10.44 சதவீதமும் அதிகரித்தது. சமையல் எண்ணெய் விலை 7.57 சதவீதமும், புகையிலைப் பொருள்களின் விலை 10.10 சதவீதமும் உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

## பருத்திச் சண்டை பஞ்சாய் பறப்பது ஏன்?

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 15 Mar 2012 01:25:56 AM IST

இந்தியாவில் நாட்டுநலன் கருதி எப்போதாவது அபூர்வமாக எடுக்கப்படும் சில நல்ல முடிவுகள்கூட மத்திய அமைச்சர்களின் குடுமிப்பிடி சண்டையாக மாறிவிடுகிறது. நமது பிரதமர் இந்தியாவை மௌனமாக அமெரிக்காவுக்கு விற்று வருவது பற்றாமல், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவர் பவார், தன் பங்குக்கு நோயுற்ற பருத்தி ஆலைத் தொழிலை சீனாவுக்கு விற்பதில் முனைப்பாக இருப்பதால் இவருடைய கவனத்துக்கு வராமலேயே வர்த்தக அமைச்சரகம் பஞ்சு ஏற்றுமதியைச் சிறிது காலத்துக்குத் தடைசெய்துவிட்டதால், பற்றி எரிகிறார் பவார். வர்த்தகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் (தயாநிதி மாறனிடமிருந்து பறிக்கப்பட்ட துறை)ஆனந்த் சர்மாவுக்கும் பவாருக்கும் நிகழ்ந்து வரும் பனிப்போருக்கு முற்றுப்புள்ளி வைக்க பிரதமர் நிதியமைச்சரைப் பஞ்சாயத்து செய்யப் பணித்துள்ளார். இந்த நாடகம் மார்ச் 5, 6-ம் தேதிகளில் நிகழ்ந்துள்ளதை நாடறியும்.

பருத்தி சாகுபடி செய்து நஷ்டமாகி ஆயிரக்கணக்கான விதர்பா விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளக் காரணமான பவார் - பிரதமர் கூட்டணி இன்று ஜவுளித் தொழிலை நம்பியுள்ள பல்லாயிரக்கணக்கான தொழில் முனைவோரையும் தற்கொலைக்குத் தூண்டும் விதத்தில் பஞ்சு ஏற்றுமதித் தடையை மறுபரிசீலனை செய்யும்படி கூறியுள்ளது. பஞ்சு ஏற்றுமதியால்

விவசாயிகளுக்கு நல்ல விலை கிட்டும் என்ற பொய்யைக் கூறித் தன்னை விவசாயிகளின் பாதுகாவலராகவும் காட்டிக்கொள்ள அவர் தயங்கவில்லை.

விவசாயிகளிடமிருந்து கொள்முதலாவது விதை நீக்கப்படாத கபாஸ் பருத்தியே தவிர, விதை நீக்கப்பட்ட பஞ்சு அல்ல. விதை நீக்கம் செய்த பஞ்சு, அதாவது பல மாதங்களுக்கு முன்பு மலிவு விலையில் விவசாயிகளிடமிருந்து விதையுடன் கூடிய சுத்தம் செய்யப்படாத பருத்தியை ஜின்னிங் ஆலைகள் வாங்கி, சுத்தம் செய்து 175 கிலோ பேல்களாக பேக் செய்து பஞ்சு வடிவில் ஏற்றுமதி செய்கிறது அல்லது உள்ளூர் நூற்பு ஆலைகளுக்கு வழங்குகிறது.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் சமயத்தில் பஞ்சு ஏற்றுமதிக்குத் தடைவிதிப்பது உண்டு. விவசாயிகளிடம் சரக்குத் தீர்ந்ததும் ஏற்றுமதித் தடை நீக்கப்படும். மலிவு விலையில் வாங்கிய கபாஸ் பருத்தியைப் பஞ்சாக மாற்றி ஏற்றுமதி செய்வோரும் ஊக வணிகம் செய்வோரும் லாபம் பெறுவது மரபு. இம்முறை பஞ்சு ஏற்றுமதிக்குத் தடை சரியான நேரத்தில்தான் விதிக்கப்பட்டுள்ளது.

""விவசாயிகளுக்கு நஷ்டம்" ""விலை கிடைக்காது" என்ற பேச்சுக்குப் பொருள் இல்லை. ஏனெனில், இனி செப்டம்பர் - அக்டோபரில்தான் புதிய பருத்தி சீசன். இப்போது விவசாயிகளிடம் பருத்தி இருக்க வாய்ப்பு இல்லை. எனினும், இன்று விதிக்கப்பட்ட தடைக்கும் பிப்ரவரியில் வெளிவந்த ஒரு செய்திக்கும் தொடர்பு உண்டா என்று பகுத்தறிவது நன்று.

சி.பி.ஐ. டைரக்டர் ஏ.பி. சிங், இந்தியாவிலிருந்து ஸ்விஸ் வங்கிக்குச் சென்று பதுக்கி வைக்கப்பட்ட பணம் 24.50 லட்சம் கோடி என்பதாகவும், சுரங்க ஊழல், ஆதர்ஷ் ஊழல், காமன்வெல்த் விளையாட்டில் கல்மாடி ஊழல், 2ஜி-யின் ராஜ ஊழல் ஆகியவை மூலம் பெறப்பட்ட கருப்புப் பணம் எப்படியெல்லாம் பயணம் செய்து சுவிட்சர்லாந்து செல்கிறது என்றும் விளக்கியுள்ளார்.

ஹவாலா வடிவில் துபாய் செல்கிறது. பின்னர் சிங்கப்பூர். சிங்கப்பூரிலிருந்து மூடிக்கம்பெனிகள் அதாவகு செல்கம்பெனி மூலம் வரியில்லா உலகமான மோரீஷஸ், கேமேன் தீவு, விர்ஜின் தீவு வந்து, ஸ்விஸ் வங்கிக்குப் போவதாக ஒரு பேச்சு உள்ளது.

2010-11 ஆண்டுக்கான பஞ்சு ஏற்றுமதி 84 லட்சம் பேல் (1 பேல் - 170 கிலோ) என்று அன்னிய வர்த்தகத் துறை அதிகபட்ச நிர்ணயம் செய்துள்ளதை மீறி 94 லட்சம் பேல் ஏற்றுமதியாகிவிட்டது. இப்படி குறி இலக்கை மீறிய 10 லட்சம் பேல் ஹாங்காங்கில் பதுக்கப்பட்டுள்ளது. 2 பேல் கொண்ட 1 கேண்டி பஞ்சுவிலை ரூ. 4,000 என்று கொள்வோமானால், பதுக்கப்பட்ட பஞ்சு மதிப்பு 10,00,000 ஷ 2000 ஆகும். இப்படிப் பதுக்கியவர்கள் சீன ஏஜண்டா? இந்திய ஏஜண்டா?

கடந்த ஆண்டு ஒரு கேண்டி பஞ்சு ரூ. 5,000 விற்றது. இந்த ஆண்டு இந்தியாவில் பருத்தி உற்பத்தி கூடியதால் ரூ. 4,000-க்குக் குறைந்துள்ளது. என்ன விலை விற்றாலும் சீனாவின் தாகத்தைத் தீர்க்க முடியாது. விலை ஏறிய பின்பு சீனாவுக்கு விற்றுவிடும் திட்டம் உண்டு. இப்படிப் பதுக்கல் நிறுவனத்துக்குப் பஞ்சு விற்றதில் யாருக்கு எவ்வளவு பங்கு ஸ்விஸ் வங்கியில் வரவானதோ தெரியவில்லை. ஹாங்காங்கில் இந்தியப் பஞ்சு பதுக்கப்பட்ட விஷயமறிந்த பின்னரே இந்தத் திடீர் தடை. இந்தத் தடையை 5-3-2012 அன்று விதித்தவர் அன்னிய வர்த்தகத் துறை டைரக்டர் ஜெனரல் ஆவார்.

பஞ்சு ஏற்றுமதியில் உள்ளூர்த் தேவை புறக்கணிக்கப்பட்டு ஏற்றுமதிக்கு மட்டுமே வழங்கப்படும் அதிக முக்கியத்துவம் இந்தியாவின் ஜவுளித்தொழிலை நசுக்கிவிடும்போல் தெரிகிறது. பருத்தி உற்பத்தியில் தொடங்கி பருத்தி பஞ்சாகிப் பின் நூலாகி, நூல் துணியாகி, துணி உடையாகி ஏற்றுமதியாகும்வரை எண்ணிப் பார்த்து இப்படி எண்ணிப் பார்த்ததை சீனாவுடன் ஒப்பிட்டுப்

பார்க்கும்போது நெஞ்சம் புண்ணாகிறது. தேசத்தின் மரியாதையைக் குறிக்கும் இந்திய ஜவுளித்தொழிலின் அலங்கோலம் தேசிய அவமானமாக மாறிவிட்டதும் புலனாகும்.

இந்திய விடுதலைக்கு ஆதார சுருதியாக விளங்கிய மகாத்மா காந்திக்கு ""கைராட்டினமே கதர் பூட்டினோமே" என்று பாரதியார் கவிபாடி மாலை போட்டார். மகாத்மா காந்திக்கு வெற்றி தேடித்தந்த போராட்டம், ""சுதேசி கதர் இயக்கம்" ஆகும். கிளாஸ்கோ, லங்காஷைர் மில் துணிகளை வீதிகளில் கொளுத்தி வளர்ந்தது சுதேசி கதர் இயக்கம். கதர் துணி மட்டுமல்ல, கைத்தறி நெசவு, பவர்லூம், நூற்பு ஆலை, ஜவுளி ஆலை எல்லாமே இந்தியாவின் மரியாதைகள். இந்த மரியாதைகளை நினைத்துத்தான் மகாத்மா காந்தி பஞ்சு ஏற்றுமதியை அனுமதிக்க மறுத்தார். அவ்வாறு அன்று பஞ்சு ஏற்றுமதிக்கு அனுமதி மறுக்கப்பட்டதால்தான் மும்பையும் கோவையும் ஜவுளித்தொழிலால் செழித்தது.

கச்சாப் பொருள் பிரச்னையாகும் என்று எண்ணித்தான் பிரிட்டிஷ் நிறுவனங்களால் சென்னையில் பின்னி மில், மதுரையில் ஹார்வி மில் உருவாயிற்று. இங்கிலாந்துக்குப் பஞ்சு ஏற்றுமதியை காந்தி தடை செய்தார். இன்று நம்மை ஆள்பவர், சீனாவுக்குப் பஞ்சு ஏற்றுமதியை அனுமதிக்கிறார்.

கடந்த மூன்றாண்டுகளில் சராசரிப்படி உலக உற்பத்தி பருத்தி கபாஸ் (விதையுடன்) வடிவில் 22 கோடி டன்களாகும். மொத்த உலக உற்பத்தியில் சீனாவின் பங்கு 30 சதவிகிதம். இந்தியாவின் பங்கு 25 சதவிகிதம். பின்னர் அமெரிக்கா 10 சதவிகிதம். பாகிஸ்தான் 10 சதவிகிதம். இவற்றில் சீனாவின் நுகர்வு 10.1 கோடி டன்கள். இந்தியாவின் நுகர்வு 7.7 கோடி டன்கள்.

இரண்டு நாடுகளுமே நுகர்வு அடிப்படையில் பற்றாக்குறை நாடுகள். சொந்த உற்பத்திக்கு மேல் உபரி இருப்பு மற்றும் இறக்குமதி செய்துதான் தொழில் தேவை நிறைவு செய்தாக வேண்டும்.

ஒருகாலத்தில் ஜவுளித் தொழிலில் முதல் நிலை வகித்த இந்தியா இன்று இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுவிட்டது. முதலிடத்தில் உள்ள சீனா இந்தியாவால் எட்டிப்பிடிக்க முடியாத உயரத்துக்குச் சென்றுவிட்டது. பஞ்சை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று கூறிய காந்தியை நாம் மறந்துவிட்டதால் வந்த வினை இது.

பருத்தி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் சீனா பஞ்சை ஏற்றுமதி செய்யாமல் உலகச் சந்தையில் எவ்வளவு விலை விற்றாலும் பஞ்சை இறக்குமதி செய்தவண்ணம் உள்ளது. ஆனால், இந்தியாவோ கதர், கைத்தறி, நூற்புத் தொழில்களை நசித்தவண்ணம் உள்ளது. ஒவ்வோராண்டும் நூற்பு ஆலைகளும் ஜவுளி ஆலைகளும் திவாலாகி மூடும் நிலையில் உள்ளன. சாராய வியாபாரியான விஜய் மல்லையாவின் கிங்ஃபிஷர் நிறுவனத்துக்கு அரசு உதவ முன்வருகிறது. ஆனால், நோயுற்ற ஜவுளித் தொழிலைப் பற்றிய அக்கறையில்லாத இந்திய அரசு பஞ்சாக ஏற்றுமதி செய்து சீனாவை வாழ்விக்கத் தயாராக உள்ளது. இந்திய ஜவுளித்தொழில் சரிந்து வருவதால், சீனா நிமிர்ந்து நிற்கிறது.

பருத்தியை - அதாவது கபாஸ்க் கொட்டை நீக்கிச் சுத்தம் செய்து பஞ்சாக்கிப் பின் நூலாக்கித் துணியாக்கிப் பின்னலாடைகளாக்கி இந்தியாவும் ஏற்றுமதி செய்கிறது. சீனாவும் ஏற்றுமதி செய்கிறது. இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி மதிப்பு 200 பில்லியன் டாலர் என்றால் சீன ஜவுளி ஏற்றுமதி மதிப்பு 12 ட்ரில்லியன் யு.எஸ். டாலர். இந்தியாவைவிட ஆறு மடங்கு அதிகம். இந்தியாவிடம் பஞ்சு வாங்கி நூற்று ஆடையாக்கி பன்மடங்கு மதிப்புக் கூட்டி விற்கும் சீனா புத்திசாலியா? இந்தியா புத்திசாலியா?

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உள்ள வித்தியாசம் எதுவெனில், சீனாவுக்கு வணிகம் அத்துப்படி. சீன வணிகத்தில் தேசநலம் உள்ளது. இந்தியாவுக்கு வணிகம் தெரியாதது அல்ல. தேசநலம் புறந்தள்ளப்பட்டு சுயநலமும் சுயலாபமும் முந்தி நிற்பதைக் கவனிக்கலாம்.

பஞ்சு ஏற்றுமதிக்குத் தடைவிதித்து இந்தியாவில் உள்ள நூற்பு ஆலைகளையும், ஜவுளி ஆலைகளையும் நல்ல லாபத்தில் இயங்க வைத்து மதிப்புக்கூட்டிய உடைகளாக ஏற்றுமதி செய்து பெறும் லாபத்தில், பருத்தி சாகுபடியாளர்களுக்கும் வழங்கிப் பருத்திக் கொள்முதல் விலையை உயர்த்துவதுதான் நல்ல தேசத்தொண்டு.

பஞ்சு ஏற்றுமதியில் ஊகவணிகத்துக்கும் பதுக்கலுக்கும் வழிவிடும் அளவில் அமைச்சர்கள் வாய்ச்சண்டை போடுவது நாட்டுக்கு அழகல்ல. குஜராத், மகாராஷ்டிரம் மாநில அரசுகளும் சரத் பவாருடன் சேர்ந்துகொண்டு பஞ்சு ஏற்றுமதித் தடையை நீக்க வேண்டுமென்று கோருவதால் பஞ்சு ஏற்றுமதி தொடரும். எனினும், பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்ய உத்தரவிட்ட அன்னிய வர்த்தகத்துறை டைரக்டர் ஜெனரலும், ஆனந்த் சர்மாவும் தங்கள் முயற்சியில் பெற்ற தோல்வி அவர்களுக்கல்ல. இது பாரத நாட்டின் தோல்வி, இந்திய ஜவுளித்தொழில்பெற்ற தோல்வியும்கூட.

## மண்புழு உரத் தயாரிப்பு செயல் விளக்கம்

First Published : 14 Mar 2012 02:29:50 PM IST

அரியலூர், மார்ச் 13: அரியலூர் மாவட்டம், மருவத்தூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் குறித்த செயல்முறை விளக்க நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் மற்றும் அரியலூர் அரசுக் கலைக் கல்லூரி ஆகியவை இணைந்து இந்த நிகழ்ச்சியை நடத்தின.

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரம் வேளாண் அறிவியல் மையத்தைச் சேர்ந்த முனைவர் இரா. மாரிமுத்து நிகழ்ச்சியில் பங்கேற்று, விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள் குறித்த செயல்முறை விளக்கத்தை செய்து காண்பித்தார்.

மண்புழு உரத்தின் பயன்பாடுகள், அதை எந்த வகையான பயிர்களுக்கு உரமிட வேண்டும் போன்ற கருத்துகளையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார் மாரிமுத்து.

மருவத்தூர் கிராம ஊராட்சித் தலைவர் து. காசிநாதன் சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் கிராம பொதுமக்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும், கல்லூரியின் இயற்பியல் துறைத் தலைவருமான இரா. வள்ளுவன் வரவேற்றார். இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர் ம. ராசமூர்த்தி நன்றி கூறினார்.

## மஞ்சள் சந்தையில் கூடுதலாக 500 மாதிரிகள் வைக்க அனுமதி

First Published : 14 Mar 2012 10:42:34 AM IST

ஈரோடு, மார்ச் 13: ஈரோடு மஞ்சள் சந்தையில் கூடுதலாக 500 மஞ்சள் மாதிரிகள் வைக்க ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அனுமதி அளித்துள்ளது.

ஈரோடு அனைத்து மஞ்சள் கிடங்கு உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகள் சார்பில் நடைபெற்று வரும் மஞ்சள் சந்தையில் இப்போது 800 மாதிரிகள் மட்டுமே வைக்க முடியும். இந்த ஆண்டு மஞ்சள் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் இப்போது வரத்து அதிகரித்துள்ளது.

இதனால், தினமும் 1,000 மாதிரிகளுக்கு மேல் வருகிறது. திங்கள்கிழமை மட்டும் 2,000 மாதிரிகள் வந்தன. இதையடுத்து இடவசதி இல்லாததால் சாலைகளில்கூட மஞ்சள் மாதிரிகள்

வைக்கப்பட்டன. இடவசதி இல்லாததால் 300-க்கும் மேற்பட்ட விவசாயிகளின் மஞ்சள் மாதிரிகள் திருப்பி அனுப்பப்பட்டன.

இதைத் தொடர்ந்து விவசாயிகளின் மஞ்சள் மாதிரிகளை வைக்க கூடுதல் இடவசதி செய்துதர வேண்டும் எனக்கோரி விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகத்திடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

இந்நிலையில், மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்பேரில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த சங்க கட்டடம் அருகே உள்ள திருமண மண்டபத்தில் மஞ்சள் மாதிரிகளை வைக்க ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர்.

இந்த திருமண மண்டபத்தில் 500 மாதிரிகள் வைக்க முடியும். இதன் மூலம் மஞ்சள் சந்தையில் 1,300 மாதிரிகள் வைக்கக் கூடிய அளவுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது என ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் என்.மணி தெரிவித்துள்ளார்.

## மார்ச் 16 விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

First Published : 14 Mar 2012 01:14:16 PM IST

ராமநாதபுரம், மார்ச் 13: ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இந்த மாதம் 16 ஆம் தேதி மாவட்ட வருவாய் அதிகாரி கா.ஜெயராமன் தலைமையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளது.

விவசாயிகளும், விவசாய சங்கப் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த பொருள்கள் குறித்து மட்டும் விவாதிக்குமாறு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறுவடை தொடக்கம்: நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க கோரிக்கை

First Published : 14 Mar 2012 04:12:51 PM IST

ஸ்ரீவைகுண்டம், மார்ச் 13:÷தூத்துக்குடி மாவட்டத்தில் நெல் அறுவடை தொடங்கியது. இதனால் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

÷தாமிரபரணி பாசனத்தில் பிசான சாகுபடி நெல் அறுவடை தொடங்கியுள்ளதால் நெல் விலை குறையும் நிலையில் உள்ளது.

÷இப்போது வெளிச்சந்தையில் சாதா ரகம் கோட்டை 1200 ரூபாயாகவும், சன்ன ரகம் 1300 ரூபாயாகவும் உள்ளது.

÷மத்திய, மாநில அரசுகளின் நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு சாதா ரகம் 1130 ரூபாயாகவும், சன்ன ரகம் 1180 ரூபாயாகவும் உள்ளது.

÷அரசு நிர்ணய விலையை விட வெளிச்சந்தை விலை கோட்டை நெல்லுக்கு சாதா ரகத்தில் 324 ரூபாயும், சன்னரகத்தில் 409 ரூபாயும் குறைவாக உள்ளது.

÷இதைப் பயன்படுத்தி விவசாயிகளிடத்தில் குறைந்த விலைக்கு நெல்லை கொள்முதல் செய்ய சிலர் முயற்சி செய்து வருகிறார்கள்.

÷எனவே கடந்த ஆண்டைப்போல ஸ்ரீவைகுண்டம், குரும்பூர், சிவத்தையாபுரம், குலையன்கரிசல் ஆகிய இடங்களில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களை மீண்டும் திறக்க வேண்டும்.

÷ஆத்தூர், செய்துங்கநல்லூரில் புதிதாக நெல் கொள்முதல் நிலையங்களை அரசு திறந்து, விவசாயிகளிடத்தில் நேரடியாக நெல் கொள்முதல் செய்து நியாயமான விலை கிடைக்கச் செய்ய ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

÷இதுகுறித்து தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை அமைப்பாளர் நயினார் குலசேகரன் கூறியதாவது:

÷கடந்த ஆண்டு இருந்த நெல் கொள்முதல் விலையைவிட இப்போது சன்ன ரகத்துக்கும், சாதா ரகத்துக்கும் மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலை போதுமானதாக இல்லை.

வேலையாள்கள் மற்றும் உற்பத்திக்குத் தேவையான தண்ணீர் போன்றவை கிடைக்காத சூழ்நிலையில் கொள்முதல் விலையை குறைவாக நிர்ணயம் செய்திருப்பது விவசாயத்தைப் புறக்கணிக்கும் செயலாகும்.

÷எனவே மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளின் நலன் கருதி, உற்பத்தி செய்யும் நெல்லுக்கு குறைந்தபட்சம் குவிண்டாலுக்கு 1500 ரூபாயாவது விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## இயற்கை ரப்பர் உற்பத்தி 57,100 டன்

மார்ச் 15,2012,00:01



கொச்சி: சென்ற பிப்ரவரி மாதத்தில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 57 ஆயிரத்து 100 டன்னாகக் குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், 57 ஆயிரத்து 600 டன்னாக இருந்தது.மதிப்பீட்டு காலத்தில், இயற்கை ரப்பர் பயன்பாடு, 78 ஆயிரம் டன்னிலிருந்து, 80 ஆயிரத்து 500 டன்னாக அதிகரித்துள்ளது. இதன் இறக்குமதி, 8,458 டன்னில் இருந்து 22 ஆயிரத்து 924 டன்னாக அதிகரித்துள்ளது.நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி

வரையிலான, 11 மாத காலத்தில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 8 லட்சத்து 41 ஆயிரத்து 500 டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, 4 சதவீதம் (8 லட்சத்து 7 ஆயிரத்து 550 டன்) அதிகம்.நடப்பு நிதியாண்டில், இந்தியாவின் இயற்கை ரப்பர் உற்பத்தி, 9.02 லட்சம் டன்னாகவும், பயன்பாடு, 9.66 லட்சம் டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## குட்டை ரக பப்பாளி பயிரிட்டு நாமக்கல் விவசாயி சாதனை

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,02:38 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல் : நாமக்கல் அருகே விவசாயி ஒருவர், குட்டை மரம் ரக பப்பாளி விவசாயம் மேற்கொண்டு, அதன் மூலம் கணிசமான வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தின் ஒரு பகுதி முழுவதும், ஏரி, குளம் மற்றும் கிணற்று பாசனத்தை நம்பி விவசாயம் மேற்கொள்ளும் விளை நிலங்களாகும். இந்நீர்லைகளுக்கு பருவ மழை மட்டுமே ஆதாரமாக உள்ளது. மாவட்டத்தை பொறுத்தவரை, குறைந்த மழையளவு உடையதாகும். எனினும், இங்குள்ள விவசாயிகள், காலத்தின் சூழலுக்கு ஏற்ற விவசாயம் மேற்கொள்வதில் வல்லவர்களாக உள்ளனர்.

அதன்படி, நாமக்கல் அருகே சிலுவங்காட்டை சேர்ந்த விவசாயி ஒருவர், குட்டை மர ரக பப்பாளி விவசாயம் மேற்கொண்டுள்ளார். அவற்றுக்கு குறைந்த அளவு தண்ணீர் போதுமானது என்பதால், அதன் மூலம் அவர் கணிசமான வருவாய் ஈட்டி வருகிறார்.

இதுகுறித்து பப்பாளி விவசாயி குமரவேல் கூறியதாவது:

இம்மரங்கள் ரெட் லேடி வகையை சேர்ந்தது. இப்பழம் பானை போல் நன்கு பருமனாக இருக்கும். பழத்தில் விதைகளும் குறைந்து காணப்படும். நடவு செய்த பின் எட்டாவது மாதம் முதல் பப்பாளி அறுவடை செய்யலாம். பப்பாளிக்கு, மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

அதனால், வேலிப் பயிராக நடவு செய்யப்பட்ட பப்பாளி, தற்போது தோட்டத்தில் விளைவிக்கப்படுகிறது. ஒரு கிலோ பப்பாளி, 10 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.இவ்வாறு கூறினார்.

## கிழங்கு விலை வீழ்ச்சி :விவசாயிகள் மாற்றம்

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,00:26 IST

கருத்தை பதிவு செய்ய

தேவாரம் :மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சியால் வாட்டு கப்பை தயாரிக்கும் பணிக்கு விவசாயிகள் மாறிவிட்டனர்.

தேவாரம், டி.மீனாட்சிபுரம், டி.புதுக்கோட்டை பகுதியில் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மரவள்ளி கிழங்கு சாகுபடி நடக்கிறது. கடந்த ஆண்டு சேலத்திலுள்ள ஜவ்வரிசி ஆலைக்காரர்கள் நேரடியாக வந்து கொள்முதல் செய்தனர்.

டன் 6500ரூபாய் முதல் 8000 ரூபாய் வரை விற்பனையானது. நல்ல விலை கிடைத்ததால் சாகுபடி பரப்பு அதிகரித்தது. இந்நிலையில் வெளிநாடுகளிலிருந்து ஸ்டார்ச் பல ஆயிரம் டன் இறக்குமதியானது. மூலப்பொருள் கிடைத்ததால் ஜவ்வரிசி ஆலைக்காரர்கள் மரவள்ளி கிழங்கு கொள்முதல் செய்ய ஆர்வம் காட்டவில்லை.
இதனால் விலை குறைந்து டன் 2500 ரூபாய்க்கு விற்பனையானது. விவசாயிகள் கிழங்காக விற்காமல் வாட்டு கப்பை தயாரித்து அனுப்புகின்றனர். டன் 23 ஆயிரம் முதல் 26 ஆயிரம் வரை விலை கிடைக்கிறது.

## திராட்சை விலை குறைவு

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,00:15 IST

கருத்தை பதிவு செய்ய
தேனி :தேனியில் திராட்சை விலை குறைந்து வருகிறது.
மாவட்டத்தில் திராட்சை அதிகளவில் உற்பத்தியாவதால் திராட்சை விலை குறைவாக உள் ளது. கடந்த மாதம் கிலோ 160 ரூபாய்க்கு விற்ற கருப்பு திராட்சை தற்போது 120க்கு விற்கிறது.120 ரூபாய்க்கு விற்ற பச்சை திராட்சை 80 ரூபாய்க்கும், தர்பூசணி கிலோ 10 முதல் 15 ரூபாய்க்கும் விற்கப்படு கிறது. சாத்துக்குடி கிலோ 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

## பாப்பான்குளம் பகுதியில் கனமழை நெற்பயிர்கள் நீரில் மூழ்கின

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,03:37 IST

கருத்தை பதிவு செய்ய
ஆழ்வார்குறிச்சி : பாப்பான்குளம், ஆழ்வார்குறிச்சி, ஆம்பூர் பகுதிகளில் விளைந்து அறுவடைக்கு தயாரான நெற்பயிர்கள் இரண்டு நாட்கள் பெய்த மழையால் அடியோடு சாய்ந்ததால் விவசாயிகள் கடும் வேதனை அடைந்துள்ளனர்.

ஆழ்வார்குறிச்சி, ஆம்பூர், கடையம் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த வாரம் அக்னி வெயிலையும் மிஞ்சும் அளவிற்கு வெயில் கொளுத்தியது. 100 டிகிரியையும் தாண்டி வெயில் அடித்ததால் பொதுமக்கள் வெயிலின் உக்கிரத்தை தாங்க முடியாமல் திணறினர். இந்நிலையில் கடந்த இரண்டு தினங்கள் கனமழை பெய்தது. பாப்பான்குளம், ஆழ்வார்குறிச்சி, ஆம்பூர் பகுதியில் ஒரு சில விவசாயிகள் தவிர பெரும்பாலானோர் வயல்களில் விளைந்த நெற்கதிர்களை அறுவடை செய்யவில்லை.

விளைந்து நெற்கதிர்கள் அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்தபோது கடந்த இரண்டு தினங்களாக கனமழை பெய்ததால் நெற்பயிர்கள் முழுவதுமாக அப்படியே சரிந்து விட்டன. மேலும் வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் அறுவடை செய்ய முடியாத சூழலும் ஏற்பட்டுள்ளது. விளைந்த நெற்கதிர்கள் முழுமையாக சாய்ந்ததால் பார்ப்பதற்கே மிகவும்

பரிதாபமாக உள்ளது. இரு தினங்களுக்குள் அறுவடை செய்யாவிட்டால் மீண்டும் நெற்கதிர்கள் முளைக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும் நெல்லிற்கு போதிய விலையில்லாத நிலையில் மழையில் நனைந்த நெற்பயிரை அறுவடை செய்தால் இருமுறை காயப்போட வேண்டிய நிலைமை உள்ளது. மிகவும் கஷ்டப்பட்டு தான் அறுவடை செய்ய வேண்டும். கஷ்டப்பட்டு அறுவடை செய்தாலும் நெல் நல்ல விலைக்கு விற்க முடியாத சூழ்நிலை உருவான காரணத்தினால் விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விவசாயிகளின் சூழ்நிலைகளை உணர்ந்து உதவி செய்திட வேண்டுமென மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் கசமுத்து உயரதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

### நெல்,பயறு வகைகளை சேமித்து வைத்து விற்றால் கூடுதல் லாபம்

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,22:23 IST

கருத்தை பதிவு செய்ய

சிவகங்கை :மாநில வேளாண் விற்பனை வாரியம் சார்பில், விவசாயிகளுக்கு விளைபொருள் சந்தை அறிவு, அறுவடை நேர்த்தி குறித்த பயிற்சி சிவகங்கையில் நடந்தது. மாவட்ட துணை இயக்குனர் சந்திரன் தலைமை வகித்தார்.

அவர் பேசியதாவது: ""விளை பொருளுக்கு அதிக விலை கிடைக்க, குழுக்களை அமைத்து உற்பத்தியை பெருக்கி, பெரிய வியாபாரிகளிடம் விற்று லாபம் பெறலாம்'' என்றார்.

நெல், சிறுதானியம், பயறு வகைகள், எண்ணை வித்துக்களை அறுவடைக்கு பின், நன்கு உலர்த்தி, சேமித்து விற்றால் கூடுதல் லாபம், என்று வட்டார உதவி இயக்குனர் ராசா விளக்கமளித்தார்.

காய்கறி, பழங்கள் பற்றி தோட்டக்கலை துணை அலுவலர் பிச்சைமணி, சந்தை நிலவரங்களை இணையதளத்தில் பெறுவது குறித்து பேசினார்.

### விவசாய கருவிகளுக்கு ரூ.81.25 லட்சம் ஒதுக்கீடு

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,00:35 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல் :விவசாயக்கூலி பற்றாக்குறையை போக்கவும், நவீன இயந்திரங்கள் வழங்கவும் மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிய விலையில் கதிர் அறுவடைய இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி திண்டுக்கல்லில் நடந்தது. வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் லூர்துஆரோக்கியகுமார் தலைமை வகித்தார்.

உதவி செயற்பொறியாளர் ராஜ்மோகன், இளநிலை பொறியாளர் ஜான் முன்னிலை வகித்தனர்.

கதிர் அறுவடை இயந்திரத்தை மானிய விலையில் வழங்கி கலெக்டர் வெங்கடாச்சலம் பேசியது: வேளாண் கருவிகளை மானிய விலையில் வழங்க, 81.25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடவு, களை எடுக்கும் இயந்திரங்கள் போன்ற 33 கருவிகள் வழங்கப்படும், என்றார்.

## கோழி கறி விலை உயர்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,22:34 IST

கருத்தை பதிவு செய்ய

கோழிக்கறி விலை சென்னையில் எகிறியது.

சென்னைக்கு கோவை, பல்லடம், கிருஷ்ணகிரி மற்றும் சித்தூர் பகுதிகளில் இருந்து தினமும், 100 லோடு அளவுக்கு கோழிகள், இறைச்சிக்காக சென்னைக்கு கொண்டுவரப்படுகின்றன. சனி, ஞாயிறு மற்றும் விசேஷ நாட்களில், 400 லோடு அளவிற்கு வரத்துள்ளது.

வஞ்சிரம் மீன் விலை

ஆட்டுக்கறி மற்றும் வஞ்சிரம் மீன் ஒரு கிலோ, 400 ரூபாய்க்கும், மற்ற ரக மீன்கள் 350 ரூபாய் வரையிலும் விற்கப்படுகின்றன. அசைவ உணவை விரும்பும் நடுத்தர மற்றும் ஏழை மக்களுக்கு, கோழிக்கறி முக்கியமானது.

கடந்த பிப்ரவரி மாதம் இறுதி வரை, ஒரு கிலோ கோழிக்கறி, 100 ரூபாய்க்கு விற்றது.

அடுத்த ஓரிரு தினங்களில், 130 ரூபாயாக விலை உயர்ந்தது. கடந்த 12ம் தேதி முதல், 140 ரூபாயாக உயர்ந்துள்ளது.

தற்போது பிறந்த நாள் விழாக்களில், கோழி

பிரியாணி தவறாமல் இடம் பெறுகிறது. இதனால், கோழிக்கறியின் தேவை அதிகரித்துள்ளது.

கடுமையான வெயில் காரணமாக கோழிகள் அதிகமாக இறப்பதாகக் கூறப்படுகிறது. இதனால், கோழிக்கறி விலை மேலும் கூடும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

சென்னை கோழிக்கறி வியாபாரி அகமது கூறியதாவது:

கோழி உற்பத்திக்கான பிராய்லர் கோழி முட்டை விலை மிகவும் குறைந்துள்ளது. இதனால் நஷ்டம் அடைந்த உற்பத்தியாளர்கள், முட்டை உற்பத்திக்கு பயன்பட்ட கோழிகளை, இறைச்சிக்காக விற்றுவிட்டனர். இதனால், கோழி உற்பத்தி குறைந்து வருகிறது.

தற்போது உற்பத்தியாகும் கறிக்கோழியில், 10 சதவீத கோழிகள் கடுமையான வெயிலால் இறந்து விடுகின்றன. அதிக அளவில் கோழி இறைச்சி தேவைப்படும் நிலையில், விலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அகமது கூறினார்.

## கொளுத்தும் வெயிலால் இளநீர் விற்பனை கனஜோர்

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,22:55 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் :மாவட்டத்தில் வெயில் அதிகரித்துள்ளதால், இளநீர் விற்பனை கனஜோராக நடந்து வருகிறது. இதனால் விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது.
மாவட்டத்தில் மக்கள் அதிகம் கூடும் இடங்கள், நெடுஞ்சாலை ஓரங்களில் இருசக்கர வாகனங்களில் நின்றவாறு, பலர் இளநீர் விற்பனை செய்கின்றனர்.
சென்னை - திருப்பதி தேசிய நெடுஞ்சாலை, திருவள்ளூர் - ஊத்துக்கோட்டை நெடுஞ்சாலை, திருவள்ளூர் - பேரம்பாக்கம் சாலை, பூந்தமல்லி - பேரம்பாக்கம் நெடுஞ்சாலைகளில், சாலையோரம் உள்ள மரத்தடியில் ஆங்காங்கே இளநீர் கடைகள் வைக்கப்பட்டுள்ளன.
கோடைக் காலத்துக்கு முன்பு, ஒரு இளநீர், 10 முதல், 12 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

தற்போது கோடை வெயில் சுட்டெரிப்பதால், ஒரு இளநீர், 18 முதல், 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.
இதுகுறித்து இளநீர் வியாபாரி ஒருவர் கூறும்போது, ""இந்த இளநீர்களை பொள்ளாச்சி, கேரளா, விழுப்புரம், வேலூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து விற்பனைக்காக லாரிகளில் கொண்டு வருகிறோம்.
தற்போது வெயில் அதிகரித்துள்ளதால் தினசரி, 50 முதல், 100 இளநீர் வரை விற்பனை செய்கிறேன். இதன் மூலம் எனக்கு குறைந்தபட்சம், 200 ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது,'' என்றார்.
தர்பூசணியும் விற்பனை
இதேபோல் சாலையோர மரத்தடியில் ஆங்காங்கே தர்பூசணி வியாபாரமும் நடந்து வருகிறது. கடந்த ஆண்டு தர்பூசணி துண்டு, 5 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்தது. தற்போது, ஒரு துண்டு, 8 ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது.

**காலிபிளவர், முட்டைகோஸ் விளைச்சல் பாதிப்பால் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,23:51 IST

கருத்தை பதிவு செய்ய
பண்ருட்டி :அண்ணாகிராமம் ஒன்றியத்தில் முட்டை கோஸ், காலிபிளவர் பயிர்கள் புயலின் சேதம் காரணமாக விளைச்சல் முற்றிலும் பாதித்தது.
பண்ருட்டி தாலுகா அண்ணாகிராமம் ஒன்றியத்தில் ஆண்டுதோறும் பனிக்காலத்தில் முட்டை கோஸ், காலிபிளவர், பீன்ஸ், தக்காளி, பச்சை மிளகாய், முள்ளங்கி உள்ளிட்ட தோட்டப் பயிர்களை ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர்.
கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் 150 ஏக்கர் பரப்பளவில் முட்டைகோஸ், காலிபிளவர் ஆகியவை பனிக்கால பயிர்களாக செய்து வந்தனர். ஒவ்வொரு ஆண்டும் பண்ருட்டி மார்க்கெட்டில் இருந்து சென்னை, புதுச்சேரி, சிதம்பரம், கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன.
கடந்த மூன்று ஆண்டுகளாக தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் அலட்சியம் காரணமாக விவசாயிகளுக்கு தோட்டப் பயிர்களை மேலும் செம்மையாக பயிர் செய்து பயனடைய நாற்றாங்கால் வழங்குவதில்லை. விவசாயிகள் பூச்சிகள், குறைந்த நீரில் அதிக லாபம் பெறுவது

குறித்த எவ்வித விழிப்புணர்வு பயிற்சியும் வழங்கவில்லை.
இதனால் ஒவ்வொரு ஆண்டும் முட்டைகோஸ், காலிபிளவர் விவசாயத்தை பெருமளவு விவசாயிகள் கைவிட்டு மாற்றுப் பயிர்கள் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
இதனால் 10 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே கோஸ், காலிபிளவர் விளைவித்தனர். குறைந்த அளவில் பயிரிட்ட காலிபிளவர், முட்டை கோஸ் பயிரும் "தானே' புயலில் வீணானதால் விவசாயிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

## சின்னசேலத்தில் மக்காச்சோளம் வரத்து குறைவு, விலையும் சரிவு

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,23:25 IST

கருத்தை பதிவு செய்ய
சின்னசேலம் :சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காச்சோளம் வரத்து குறைந்தது.
சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு கடந்த வாரம் 650 மூட்டைகள் மக்காச்சோளம் வரத்து இருந்தது.
அதன் அதிகபட்ச விலை 100 கிலோ கொண்ட மூட்டை ஒன்று 1,135 ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம் 7 லட்சத்து 34 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பில் மக்காசோளம் கொள்முதல் செய்யப்பட்டது.
கடந்த 12ம் தேதி 170 மூட்டைகள் மட்டுமே மக்காசோளம் விற்பனைக்கு வந்தது. ஒரு மூட்டை அதிகபட்ச விலை 1,134 ரூபாய்க்கு விலை போனது. குறைந்தபட்சமாக ஆயிரத்து 68 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டது.
இது கடந்த வாரத்தை விட 8 ரூபாய் குறைவாகும். மக்காச்சோள வருகை மிகவும் குறைந்து வரும் நிலையில் வரும் வாரங்களில் மக்காச்சோள வரத்து அதிகரிக்கும்
என கமிட்டியின் கண்
காணிப்பாளர் முருகன் தெரிவித்தார்.
அதேபோல் துவரை ஒரு மூட்டை 2,100 ரூபாய்க்கும், வரகு ஒரு மூட்டை 888 ரூபாய்க்கும் விற்பனையானது.

## விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,23:41 IST

கருத்தை பதிவு செய்ய
விருத்தாசலம் :விருத்தாசலம் அடுத்த பெரியகண்டியங்குப்பத்தில் விருத்தாசலம் வட்டார வேளாண் துறை சார்பில் தரமான விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.
கவுன்சிலர் ராஜ்குமார் தலைமை தாங்கினார். உதவி வேளாண்மை அலுவலர்கள் மகேஸ்வரி, செல்லப்பன் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் விஜயகுமார் தரமான விதை உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.
முகாமில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

## விருத்தாசலத்தில் முந்திரி சாகுபடி கருத்தரங்கம்

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,23:47 IST

கருத்தை பதிவு செய்ய

விருத்தாசலம் :விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் "தானே' புயலுக்குப் பின் முந்திரி சாகுபடி கருத்தரங்கம் நடந்தது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையம், கொச்சி முந்திரி மற்றும் கோகோ மேம்பாட்டு இயக்குனரகம் ஆகியவை இணைந்து "தானே' புயலுக்குப்பின் முந்திரி சாகுபடி மற்றும் பராமரிப்பு கருத்தரங்கை நடத்தியது.

விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையத் தலைவர் வைத்தியநாதன் தலைமை தாங்கினார்.

பேராசிரியர் (மரபியல்) புரு÷ஷாத்தமன் வரவேற்றார்.

கடலூர் வேளாண்மை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் கருத்தரங்கை துவக்கி வைத்தார்.

இணை பேராசிரியர் சுப்ரமணியன் கையேட்டை வெளியிட்டு பேசினார்.

பேராசிரியர் ஜீவா (தோட்டக்கலை) உயர் விளைச்சல் ரகங்கள் குறித்தும், இணை பேராசிரியர் அனீசா ராணி நெருக்கு நடவு மற்றும் கவாத்து குறித்தும், உதவி பேராசிரியர் செல்வராசு முந்திரியில் ஊடுபயிர் குறித்தும், ஹரிப்பிரியா முந்திரியில் நீர் சேமித்தல் மற்றும் மண்ணின் ஈரத்தன்மை பாதுகாத்தல் குறித்தும் விளக்கினர்.

இணை பேராசிரியர் அம்பேத்கர் முந்திரியில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் குறித்தும், பேராசிரியர் கருணாநிதி நோய் மேலாண்மை குறித்தும், உதவி பேராசிரியர் கண்ணன் மதிப்பு கூட்டிய பொருட்கள் குறித்தும் பேசினர்.

பின்னர் விவசாயிகள்-விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நடந்தது.

முன்னதாக விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் முக்கிய பயிர்களான முந்திரி, மணிலா, எள் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை நினைவு கூறும் வகையில் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் முந்திரி, எள், மணிலா தானியங்களைக் கொண்டு தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில் நந்தி, ஸ்ரீரங்கம் அரங்கநாதர், மதுரை மீனாட்சி, விருத்தாசலம் விருத்தகிரீஸ்வர் கோவில் தேர் சிலைகள் செய்யப்பட்டு கருத்து காட்சியாக வைக்கப்பட்டிருந்தது.

## ஆந்திர நெல் வரத்து அதிகரிப்பு; விற்பனை மந்தம்

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,22:36 IST

கருத்தை பதிவு செய்ய

தரம் குறைந்த நெல் ஆந்திராவில் இருந்து வருவதால், விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

விற்பனை மந்தத்தால், ஆந்திர வியாபாரிகள் கொண்டு வந்த நெல் தேங்குவதால், கர்நாடகாவுக்கு திருப்பி அனுப்புவது அதிகரித்து வருகிறது.

தை பருவம் முடிந்தது

சென்னை செங்குன்றம் நெல் மார்க்கெட்டிற்கு, கடந்த இரு மாதங்களில் தை பருவ அறுவடையால், திருவள்ளூர், காஞ்சிபுர மாவட்ட பகுதிகளில் இருந்து நெல் வந்து கொண்டிருந்தது.

அப்போது பி.பி.டி., எனப்படும் பாபட்லா பொன்னி ரக நெல் ஒரு மூட்டை 1,200 ரூபாய் வரை விற்பனையானது. மாவட்டப் பகுதிகளில் அறுவடை முடிந்து விட்டதால், அங்கிருந்து நெல் வருவது குறைந்துள்ளது.

ஆந்திர நெல் வரத்து

ஆந்திர மாநிலம் நெல்லூர், நாயுடுபேட்டை, மல்லம் ஆகிய பகுதிகளில் அறுவடை நடக்கிறது. அதனால் அங்கிருந்து நெல் வரத் துவங்கியுள்ளது. தினமும், 60 முதல் 75 லாரிகளில் செங்குன்றம் மார்க்கெட்டுக்கு நெல் கொண்டு வரப்படுகிறது.

அவை தான் இப்போது சென்னை மார்க்கெட்டை ஆக்கிரமித்துள்ளன. மார்க்கெட்டில் ரூபாலி நெல் வரத்து அதிகமாக உள்ளது.

தர குறைவால் தேக்கம்

தற்போது வரும் நெல் தரமற்றதாக உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். நெல்லை அரவை ஆலையில் அரிசியாக்கும் போது அதிக அளவில் நொய் வருவதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்தனர். இதனால், ஆந்திராவில் வரும் நெல்லை வியாபாரிகள் விரும்புவதில்லை. இதனால் நெல் விலை குறைந்துள்ளது.

இந்த நெல்லை அரிசி வியாபாரிகள் விரும்புவதில்லை. இதனால் தேக்கம் ஏற்பட்டுள்ளது. இது ஆந்திர நெல் வியாபாரிகளிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கொண்டு வரப்படும் நெல் ஒரு நாளில் விற்பதற்கு பதிலாக தேங்குகின்றன.

கர்நாடகாவுக்கு போகிறது

லாரிகளில் கொண்டு வரப்படும் நெல், இரண்டு நாட்கள் வரை தேங்கிக் கிடக்கிறது. இதனால், ஆந்திராவில் இருந்து வியாபாரிகள் நெல் கொண்டு வருவதையும் குறைத்துள்ளனர். சில வியாபாரிகள் நெல் லோடுகளை, கர்நாடக மாநிலம் தும்கூர் மார்க்கெட்டிற்கு அனுப்புகின்றனர். செங்குன்றத்துக்கு வந்து தேங்குபவற்றில் தினமும் 20 முதல் 30 லாரி லோடுகள் வரை தும்கூருக்கு அனுப்பப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

சமனான அரிசி விலை

அரிசி விலையில் ஏற்ற இறக்கம் எதுவும் இல்லை. கடந்த மாதத்தை போன்றே, சராசரியாக உள்ளதாக அரிசி வியாபாரிகள் தெரிவித்தனர்.

---

தினகரன்

## டெல்டா பகுதிகளில் இருந்து பொது விநியோக திட்டத்துக்காக 85 ஆயிரம் டன் நெல் கொள்முதல்ரயிலில் தர்மபுரிக்கு வந்தது

பதிவு செய்த நேரம்:2012-03-14 10:28:25

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட மக்களுக்கு பொதுவிநியோக திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக டெல்டா பகுதிகளில் இருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இதுவரை 85 ஆயிரம் டன் நெல் தர்மபுரிக்கு ரயில் மூலம் வந்துள்ளது.

தர்மபுரி மாவட்ட மக்கள் அதிகளவில் பச்சரிசி பயன்படுத்துகின்றனர். இப்பகுதியில் ரேஷன் கடைகள் மூலம் அதிகளவில் பச்சரிசி விநியோகம் செய்யப்படுகிறது. பொது விநியோக திட்டத்துக்கு தேவையான நெல் தஞ்சாவூர், கும்பகோணம் மற்றும் டெல்டா பகுதிகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த நெல் மூட்டைகள் ரயில்கள் மூலம் தர்மபுரிக்கு கொண்டு வரப்படுகிறது.

இதுவரை தஞ்சாவூர், கும்பகோணம், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா பகுதிகளில் இருந்து 85 ஆயிரம் டன் நெல் தர்மபுரிக்கு வந்துள்ளது. இந்நிலையில் நேற்று திருவாரூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட 2,126 டன் நெல் தர்மபுரி ரயில் நிலையத்திற்கு சரக்கு ரயிலில் வந்தது. அவை தமிழ்நாடு நுகர்வோர் வாணிப கழகத்திற்கு சொந்தமான ஒட்டப்பட்டி திறந்த வெளி நெல் குடோனுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டது.

இதுகுறித்து அதிகாரி கூறும்போது, தர்மபுரி மாவட்டத்திற்கு இதுவரை 85 ஆயிரம் டன் நெல் வந்துள்ளது. இன்னும் 50 ஆயிரம் டன் நெல் வரும் என்று எதிர்பார்க்கிறோம். நேற்று 58 வேகன்களில் 2,126 டன் நெல் வந்து இறங்கியது. டெல்டா பகுதியில் இருந்து வரும் நெல்லை தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 75 நெல் அரவை மில்களில் அரைத்து பச்சரிசியாக மாற்றப்படுகிறது. அதன் பின்னர் ரேசன் கடைகள் மூலம் நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் என்றார்.

## விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-03-14 10:40:51

வேப்பந்தட்டை: வேப்பந்தட்டையில் விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

கோவை வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனரகம், சிறுக மணி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் நவீன கரும்பு சாகு படி தொழில்நுட்ப பயிற்சி வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது. சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் மனோகரன் பயிற்சியை துவ க்கி வைத் தார். நவீன கரும்பு

சாகுபடி ஏன், கரும்பு சாகு படி முறைகள், இளம் நாற்று களை எடுத்து நடவு செய்தல், அதிக இடைவெளி விட்டு நடவு செய்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து பேராசிரியர் பன்னீர்செல்வம், உதவி பேராசிரியர் ஆனந்த் ஆகியோர் பயிற்சி அளித்தனர். சிறுகமணி வேளா ண்மை அறிவியல் நிலைய தலைவர் சகுந்தலா, பெரம்பலூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ச்சி அலுவலர் ரவிச்சந்திரன் பயிற்சியை ஒருங்கிணைத்தனர்.
பெரம்பலூர் சர்க்கரை ஆலை கரும்பு அலுவலர்கள் செல்வராஜ், அருள்நம்பி, கரும்பு ஆய்வாளர்கள் வீரபாண்டியன், ராமமூர்த்தி, ராஜேந்திரன், சிவமூர்த்தி, தங்கவேல், கோவிந்தசாமி, பொன்னுசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பேராசிரியர் சிந்தியா வரவேற்றார். பாரதி பாஸ்கர் நன்றி கூறினார். பயிற்சிக் கான ஏற்பாடுகளை வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய கவிமணி செய்திருந்தார்.

## விவசாயிகளுக்கு விதை சுத்திகரிப்பு பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-03-14 10:05:18

கோபி: கோபி வட்டார வேளாண்மைத் துறை சார்பில் விவசாயி களுக்கு விதை உற்பத்தி மற்றும் விதைச்சான்று நடைமுறைகள் குறித்த விதை கிராமத்திட்ட பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகு தியாக கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நெல் விதை சுத்திகரிப்பு இயந்திரங்களின் செயல்பாடுகளை கூகலூர், வெள்ளாள பாளையம், சிறு வலூர், உள்ளிட்ட பகுதிக ளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அதிகாரிகள் காண்பித்தனர்.
விதை சுத்திகரிப்பு செய் வதன் நோக்கம்,சுத்திகரிப்பு முறைகள், தரமான விதை உற்பத்தி உத்திகள், உள்ளிட்ட பல்வேறு விதைச்சான்று நடைமுறைக ளை விவசாயிகளுக்கு தெரிவித்தனர். மேலும் கூட்டுறவு சங்கத்தில் இருப்பு வைக்கப்பட்டிருந்த ஏ.எஸ்.டி.16,ஏ.டி.டி 43 உள்ளிட்ட பல்வேறு ரக நெல் வகைகளை பார்வையிட்டனர். இந்தப்பயிற்சியின் போது கோபி வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி, கூட்டுறவு சங்க விதைகள் பிரிவு பொறுப்பாளர் நாச்சிமுத்து, உதவி விதை அலுவலர் ராமகிருஷ்ண ன்,கோபி வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜா, சேகரன், செந்தில் முருகன், ஜெகநாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பருத்தி ஏற்றுமதி தடையை விலக்க வேண்டும்

பதிவு செய்த நேரம்:2012-03-14 10:05:43

ஈரோடு: பருத்தி விலையை கட்டுக்குள் கொண்டு வரவும், உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்திருந்தது. இதற்கு நாடு முழுவதும் விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.இந்நிலையில் பருத்தி ஏற்றுமதி செய்ய மத்திய அரசு திடீரென்று உத்தரவிட்டுள்ளது. இதற்கு விவசாயிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். மேலும் ஏற்றுமதிக்கான தடையை நிரந்தரமாக விலக்கி கொள்ள வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். இது குறித்து தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சபை தலைவர் சுபி.தளபதி கூறியதாவது:
மத்திய அரசின் கொள்கை முடிவுகள் பெரும்பாலும் விவசாயிகளுக்கு பாதகமாகவும் தொழிலதிபர்

களுக்கு சாதகமாகவும் இருந்து வருகின்றது. குறிப்பாக பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிப்பது விவசாயிகளை வஞ்சிக்கும் செயலாகும்.நாட்டில் பருத்தி சாகுபடி பரப்பளவு வெகுவாக குறைந்து வருகின்றது. இதற்கு காரணம் கட்டுபடியாகாத விலை. உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டு மத்திய அரசு ஏற்றுமதியை ஊக்குவிக்காமல் உள்ளதால் பருத்தி விலையும் முதலீட்டு செலவும் ஒரே அளவில் உள்ளதால் பருத்தியை பயிர் செய்ய விவசாயிகள் முன்வருவதில்லை. குறிப்பாக ஈரோடு மாவட்டத்தில் பருத்தி சாகுபடி என்பது அரிதான ஒன்றாகி விட்டது.எனவே பருத்தி விளைச்சலை அதிகப்படுத்த வேண்டுமெனில் ஏற்றுமதிக்கு எக்காரணம் கொண்டும் மத்திய அரசு தடைவிதிக்க கூடாது.

இது குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு வலியுறுத்த வேண்டும். மாநில அரசுகளை கலந்தாலோசிக்காமல் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க கூடாது என்று குஜராத் முதல்வர் நரேந்திரமோடி வலியுறுத்தி உள்ளதை போல தமிழக முதலமைச்சரும் மத்திய அரசுக்கு இது குறித்து வலியுறுத்த வேண்டும். இவ்வாறு தளபதி கூறினார்.

---

தினத் தந்தி

## ***உணவு பொருள்கள் விலை உயர்வால், பிப்ரவரியில் பணவீக்கம் 6.95 சதவீதமாக உயர்ந்தது***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*உணவு பொருள்கள் விலை உயர்வால், பிப்ரவரி மாதத்தில் பொது பணவீக்கம் 6.95 சதவீதமாக உயர்ந்தது. ஐந்து மாதங்களுக்கு பிறகு தற்போதுதான் பணவீக்கம் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஜனவரி மாதத்தில் இது 6.55 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது 0.4 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*உணவு பணவீக்கம்*

*பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 14.3 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள உணவு பணவீக்கம் ஜனவரி மாதத்தில் 0.52 சதவீதம் குறைந்து இருந்தது. இது, பிப்ரவரி மாதத்தில் 6.07 சதவீதமாக அதிகரித்துள்ளது. பிப்ரவரி மாதத்தில் பருப்பு வகைகள் விலை 7.91 சதவீதம் உயர்ந்தது. ஜனவரி மாதத்தில் 43.13 சதவீதம் சரிவடைந்து இருந்த காய்கறிகள் விலை பிப்ரவரியில் 1.52 சதவீதம் உயர்ந்தது. முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு*

*பொருள்கள் விலை 20 சதவீதமும், பால் விலை 11.70 சதவீதமும் அதிகரித்துள்ளது. இருப்பினும், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் விலை முறையே 2.22 சதவீதம் மற்றும் 48.50 சதவீதம் குறைந்தது.*

*பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 65 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள சமையல் எண்ணெய், இரும்பு உள்ளிட்ட உற்பத்தி பொருள்கள் பணவீக்கம் 5.75 சதவீதமாக உள்ளது. இரும்பு விலை 15.82 சதவீதமும், சமையல் எண்ணெய் விலை 7.57 சதவீதமும் உயர்ந்துள்ளது. முதன்மை பொருள்கள் பணவீக்கம் 6.28 சதவீதமாக உள்ளது. இது, ஜனவரி மாதத்தில் 2.25 சதவீதமாக இருந்தது. எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் 2.56 சதவீதம் குறைந்துள்ளது.*

*கடந்த 2010 டிசம்பரிலிருந்து பொது பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்து வந்தது. இதனை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி 2010 மார்ச் மாதத்திலிருந்து 2011 அக்டோபர் வரையிலான 20 மாத காலத்தில் முக்கிய கடன்களுக்கான வட்டியை 13 முறை உயர்த்தியது. இதன் காரணமாக நடப்பு நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.1 சதவீதமாக குறைந்தது.*

*ரொக்க இருப்பு விகிதம்*

*இந்நிலையில், நாட்டில் பணப்புழக்கம் மிகவும் குறைந்தது. இதனையடுத்து, வங்கிகளுக்கான ரொக்க இருப்பு விகிதத்தை பாரத ரிசர்வ் வங்கி கடந்த 45 தினங்களில் இரண்டு முறை குறைத்தது. இதனால், பணப்புழக்கம் ரூ.80,000 கோடி அதிகரிக்கும். ரிசர்வ் வங்கி இன்று நான்காவது காலாண்டிற்கான இடைநிலை பணக் கொள்கை ஆய்வு அறிக்கையை வெளியிடுகிறது. அதில், முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், பிப்ரவரி மாதத்தில் பணவீக்கம் சற்று அதிகரித்துள்ளதால், வட்டி விகிதங்களை குறைக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.*

## நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசின் உர மானியம் ரூ.70,000 கோடியை தாண்டும்

*நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசின் உர மானியச் சுமை ரூ.70,000 கோடியை தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, பட்ஜெட்டில் மதிப்பீடான ரூ.49,997–ஐ காட்டிலும் 42 சதவீதம் அதிகமாகும்.*

*அதே சமயம், வரும் 2012–13–ஆம் நிதி ஆண்டில் உர மானியச் சுமை ரூ.66,000 கோடியாக குறைய வாய்ப்புள்ளது என்று பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.*

*உர தயாரிப்பு நிறுவனங்கள் யூரியா உரத்தை மத்திய அரசு நிர்ணயம் செய்த விலையில் விற்பனை செய்கின்றன. இது, அடக்க விலைக்கும் குறைவாக இருப்பதால் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பை ஈடுகட்டும் வகையில் மத்திய அரசு மானியம் வழங்குகிறது. இந்தியாவில் ஆண்டுக்கு 5.20 கோடி டன் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதில், யூரியா மட்டும் 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.*

**கோவையில்**

# திராட்சை பழங்கள் விளைச்சல் அமோகம்; விலை சரிவு

கோவை,மார்ச்.15-

கோவையில் திராட்சை விளைச்சல் அமோகமாக உள்ளது. தினசரி கேரளாவுக்கு 6 டன் செல்கிறது.



### திராட்சை சாகுபடி

கோவை மாவட்டத்தில் உள்ள தொண்டாமுத்தூர், தீத்திப்பாளையம், காளம்பாளையம், மாதம்பட்டி, கரடிமடை, மத்திபாளையம், ஆலாந்துறை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வரும் திராட்சை தோட்டத்தை நம்பி நூற்றுக்கணக்கான விவசாயிகள் உள்ளனர்.

தற்போது கோவையில் திராட்சை பழங்கள் அறுவடை சீசன் களைகட்டி வருகிறது. விளைச்சல் அமோகமாக உள்ளதால் விலை வெகுவாக சரிந்து உள்ளது. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்து உள்ளனர். கோவை பகுதியில் இருந்து உற்பத்தியாகும் 75 சதவீத திராட்சை பழங்கள் கேரள மாநிலத்துக்கு செல்கிறது. இந்த வகையில் தற்போது தினசரி மொத்த உற்பத்தி 8 டன் வரை உள்ளது. இதில் 6 டன் திராட்சை பழங்கள் கேரள மாநிலத்துக்கு செல்கிறது. இது குறித்து கோவை மாவட்ட திராட்சை உற்பத்தியாளர் சங்க தலைவர் எம்.விஜயன் கூறியதாவது:-

### விலை கிடைக்கவில்லை

தமிழ்நாட்டில் தேனி, கம்பம் பகுதிகளுக்கு அடுத்தபடியாக பன்னீர் திராட்சை உற்பத்தியில் கோவை முக்கிய இடத்தை வகிக்கிறது. இங்கு திராட்சை சாகுபடி செய்வதற்கான ஏற்ற தட்ப,வெப்ப சூழ்நிலை உள்ளது. தற்போது கோவையில் திராட்சை அறுவடை விறுவிறுப்பாக நடந்து வருகிறது. தினசரி 8 முதல் 10 டன் வரை திராட்சை பழங்கள் அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அதிக அளவில் பன்னீர் திராட்சை உற்பத்தி செய்யப்பட்டும் அதற்குரிய விலை கிடைக்க வில்லை. மொத்த கொள்முதல் விலை என்று எடுத்துக்கொண்டால் கிலோவுக்கு ரூ.20 தான் கிடைக்கிறது. ஆனால் செலவு ரூ.18-க்கு மேல் ஆகிறது. கடந்த சில மாதங்களுக்கு கிடைத்த விலையை விட தற்போது பாதிக்கு பாதியாக குறைந்து விட்டது.

இதற்கு காரணம் தற்போது தர்பூசணி, வடமாநில விதையில்லாத திராட்சை பழங்கள் வரத்து அதிகம் உள்ளது. ஆகவே தமிழ்நாட்டில் பன்னீர் திராட்சை விற்பனை குறைந்து உள்ளது. பன்னீர் திராட்சையை பொறுத்தவரை பன்னீர் திராட்சையை பொறுத்தவரை பல்வேறு மருத்துவ குண நலன்கள் மிகுந்ததாக உள்ளது.

**கேரளாவுக்கு தினசரி 6 டன் செல்கிறது**

### விதையை சாப்பிடவேண்டும்

குறிப்பாக பன்னீர் திராட்சையில் சர்க்கரை சத்து மிகுந்து, முற்றிலும் குளுகோஸ் வடிவில் காணப்படுகிறது. குளுகோஸ் 15-20 சதவீதம் காணப்படுகிறது. இது உடலுக்கு குறுகிய நேரத்தில் ஆற்றலையும், வெப்பத்தையும் தருகிறது. பன்னீர் திராட்சையில் விதை முக்கிய பங்கு வகிக்கிறது. அதில் உள்ள சிட்ரிக் அமிலம் புற்றுநோய் வராமல் பாதுகாக்கிறது. ஆகவே அதையும் பழத்துடன் சாப்பிட வேண்டும். மேலும் அந்த நோயை குணமாக்கும் பொட்டாஷ் உப்புகள் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதுதவிர மலச்சிக்கல் நீங்கவும் இதில் செல்லுலோஸ், அங்கக அமிலங்கள் உள்ளன. ஆகவே மலச்சிக்கல் நீங்குவதற்கு தினசரி ஒருவர் ரூ.350 கிராம் திராட்சை உணவாக சாப்பிட வேண்டும்.மேலும் ஆஸ்துமாவுக்கு பன்னீர் திராட்சை நல்ல உணவாக விளங்குகிறது. பன்னீர் திராட்சைப்பழம், கல்லீரல் இயக்கத்துக்கும், பித்த நீர் சுரப்பதற்கும் தூண்டுதலாக விளங்குகிறது.

### பூச்சிக்கொல்லி மருந்து

பன்னீர் திராட்சையின் மீது படிந்துள்ள வெள்ளை போன்ற பொருள், அதை பாதுகாக்க இயற்கையாகவே காணப்படக்கூடியது. அதை கையால் துடைத்து விட்டால் போய்விடும். ஆனால் சிலர் பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதால் அதன் விளைவு என்று கூறுகின்றனர். அதுஒருபோதும் தவறு. பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து வளரும் திராட்சை மனிதர்களுக்கு எந்தவிதத்திலும் கேடு விளைவிப்பது இல்லை. உயர் தொழில் நுட்ப விஞ்ஞான ரீதியில் பரிசோதனை செய்யப்பட்டு மனிதர்களுக்கு கேடு விளைவிக்காது என்று அறிந்த பின்னர் தான்அந்த மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

திராட்சை விவசாயம் கோவை பகுதியில் பாரம்பரியமாக செய்யப்பட்டு வந்தாலும், தற்போது உற்பத்தி செலவு அதிகமாகிறது. மேலும் வேலைக்கு ஆட்கள் கிடைப்பது இல்லை. இதனால் குறிப்பிட்ட நேரத்தில் பழங்களை பறிக்க முடியாமல் போய்விடுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.



# வேளாண்மை செய்திகள்

## ‘சிப்பி காளான் வளர்ப்பு’ ஓர் லாபகரமான சுயதொழில்

**காளான்** சிறந்த உணவுப்பொருள். நல்ல சுவை மிகுந்த நாள்தோறும் உணவில் சேர்த்துக்கொள்ளும் அளவிற்கு சிறந்த உணவுப்பொருளாக காளான் விளங்குகிறது. பல்வேறு காளான் வகைகளில் சிப்பி காளான் வளர்க்கும் முறை மிகவும் எளிமையானது.

**சிப்பி காளான் வளர்ப்பு**

சிப்பி காளான் வளர்ப்புக்கு பெரிய முதலீடு எதுவும் தேவையில்லை. குறைவான முதலீடு போதுமானது. அதாவது ரூ.6 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை முதலீடு செய்து சிப்பி காளான் வளர்க்கலாம். இதற்கு 16 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட ஓலைக்குடில் போதுமானது.

காடு, மலைகள், ஆற்று ஓரங்கள், கரைகள், வீடுகளில் காலியாக உள்ள இடம், வீட்டின் மாடி, ரோடு ஓரம் என எங்கு வேண்டுமானாலும் வளர்க்க கூடிய தன்மை வாய்ந்தது சிப்பி காளான். சிப்பி காளான் வளர்ப்புக்கு அதிக நீர் வளம் தேவையில்லை. தினமும் சுமார் 10 குடம் தண்ணீர் இருந்தாலே போதுமானது. பொறுப்பாக வேலை செய்யக்கூடிய 2 பணியாட்கள் வேலை செய்தாலே போதும்.

**காளான் படுக்கை தயாரிப்பு**

சிப்பி காளான் வளர்ப்புக்கு வைக்கோல், காளான் விதை, காளான் படுக்கை தயார் செய்திட 2 அடிய உயர 1½ அடி அகல பாலித்தீன் பைகள் சுமார் 150 முதல் 200 வரையிலும், 10, 20 சவுக்கு கட்டைகள், காளான் படுக்கைகளை தூக்கி கட்டுவதற்கு நைலான் கயிறு போன்ற மூலப்பொருட்கள் தேவை. இதற்கு ரூ.4 ஆயிரம் அல்லது ரூ.5 ஆயிரம் வரை தேவைப்படும்.

50 கிலோ வைக்கோலை அதன் கொள்ளளவை தாங்கக்கூடிய தொட்டி அல்லது டிரம் இவைகளில் நீர் ஊற்றி 10 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். ஊறிய வைக்கோலை காலை 9 முதல் 10 மணிக்குள் எடுத்து குப்பைகள் மற்றும் மணல் இல்லாத இடத்தில் உலர வைக்க வேண்டும். ஒரு பிடி அளவு எடுத்து முறுக்கினால் தண்ணீர் சொட்டும் அளவுக்கு அதிக ஈரப்பதமும், அதிகம் காய்ந்து விடாமலும் உலர வைக்க வேண்டும்.

**காளான் குடில் தயாரிப்பு**

உலர வைத்த வைக்கோலை பாலித்தீன் பைகளில் நிரப்ப வேண்டும். அதற்கு முன் பாலித்தீன் பையின் அடிப்பாகத்தை சும்பு வடிவில் கட்ட வேண்டும். அதன்பின்னர் ஒரு கைப்பிடி அளவு காளான் விதையை அதில் தூவ வேண்டும். பின்பு ஒரு கைப்பிடி அளவு விதை, ஒரு கைப்பிடி அளவு வைக்கோல் என 12 அடுக்குகள் தயார் செய்து, இறுதியாக மேல் முனையில் ஒரு கைப்பிடி அளவு காளான் விதையை தூவி அடிப்பாகத்தை கட்டியது போல், மேல் பாகத்தை கட்டினால் காளான் படுக்கை தயார்.

இதற்கு காற்று, நீர் தேவை அல்லவா? அதற்காக காளான் தயாரிக்கப்பட்ட படுக்கைகளில் பெரிய ஊசியில் 50 முதல் 60 துளைகள் இட வேண்டும். இவ்வாறு 150 முதல் 200 படுக்கை தயார் செய்து ஒரு நபர் உள்ளே சென்று வர இடைவெளி விடு சவுக்கு கட்டைகள் கட்டி, அந்த சவுக்கு கட்டைகள் மேல் இந்த காளான் படுக்கைகளை வைத்து அசையா வண்ணம், ஒன்றுடன் ஒன்று உரசாமல் கட்டி விட்டால் காளான் குடிலும் தயாராகி விடும்.

**பாதுகாப்பு முறைகள்**

அதன் பின்னர் காளான் குடிலை காலை 1 மணி நேரம், மாலை 1 நேரம் தவிர மற்ற வேலைகளில் இருள் இருக்கும் வண்ணம் அடைத்து வைக்க வேண்டும். முதல் 4 நாட்களுக்கு தண்ணீர் தேவைப்படாது. அதற்கு பதிலாக ஓலை குடிலின் பக்கவாட்டில் சணல் சாக்குபைகளை ஒற்றையாக பிரித்து கட்டி, அதில் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

தரைப்பகுதி குளிர்ச்சியாக இருக்க சுமார் 5 முதல் 7 குடம் வரை தண்ணீர் ஊற்றி ஈரம் காய்ந்து விடாமல் பார்த்து கொள்ள வேண்டும். காற்றில் உள்ள ஈரப்பதங்களை ஈர்த்து காளான் படுக்கை வெள்ளை நிறமாக 4 அல்லது 5 நாட்களில் மாறும். வெள்ளை நிறமாக காளான் படுக்கை மாறிய பின்பு காளான் படுக்கை மேல் தண்ணீர் தெளிக்க வேண்டும். காலை 9 மணி, மதியம் 1 மணி, மாலை 4 மணி என தண்ணீர் தெளிப்பது சிறந்தது.

**அறுவடை**

15 நாட்கள் தண்ணீர் தெளித்து வர 21-வது நாளில் காளான் படுக்கைகளில் இருந்து காளான் மொட்டுக்கள் மலர்ந்து, அடுத்த 24 மணி நேரத்தில் பெரிய சிப்பி காளான்களாக வளர்ந்து விடும். சுத்தமான கத்திகளை பயன்படுத்தி காளான்களை அறுவடை செய்யலாம்.

**-தகவல்:டி.எஸ்.சண்முகம்,** உழவர் விவாதக்குழு அமைப்பாளர், தொட்டியபட்டி, திருப்பூர்.

## நெல் விதை உற்பத்தியில் கலப்பினங்களை தவிர்ப்பது எப்படி?

தரமான விதை உற்பத்தியில் கலப்பின பயிர்களை உரிய நேரத்தில் தகுந்த முறையில் நீக்கினால் மட்டுமே விதை தரத்தை வயலில் பேணி பாதுகாக்க முடியும். இந்த கலப்பின பயிர்கள் வயலில் ஏற்படாமல் இருக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் விவரம் வருமாறு:-

ஒரே ரகம்

விதை உற்பத்தியாளர்கள் சான்று செய்யப்பட்ட விதைகளை அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனை மையங்களில் இருந்து மட்டுமே வாங்கி பயன்படுத்த வேண்டும். அதிக அளவில் நெல் வாங்கும் போது அனைத்து மூட்டைகளும் ஒரே ரகமாக உள்ளனவா என்று கவனித்து வாங்க வேண்டும்.இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள ரகங்களை தேர்வு செய்யும் போது அவைகளை தனித்தனியே வைத்து பயன்படுத்த வேண்டும். நாற்று விடுவதற்கு தயார் செய்யும் போது ரகங்கள் கலந்து விடாமல் இருக்க வெவ்வேறு நாட்கள் மற்றும் வெவ்வேறு இடங்களை தேர்வு செய்ய வேண்டும். நடவு முடிந்து மீதமாகும் நாற்றுக்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். விதை உற்பத்தி பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் ரகங்கள் மற்றும் கலப்பு பற்றி எடுத்து கூற வேண்டும்.

கலப்பின பயிர்கள்

வயலில் கலப்பின பயிர்களை நீக்கும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அந்த ரகத்தின் முக்கிய அம்சங்களை கூறி அடையாளம் காண்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பயிர் செய்யப்பட்டு இருக்கும் ரகத்தில் இருந்து வேறுபட்டிருக்கும் கலப்பின ரகங்களை அடையாளம் காண்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலப்பின ரகங்களை நீக்கும் பணியை காலை 7 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5 மணி வரை மட்டும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அகற்றப்பட்ட கலப்பின ரகங்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

சாக்குப்பை

நெல் ரகங்களை அறுவடை செய்தல், கதிரடித்தல் மற்றும் காயவைத்தல் பணிகளை தனித்தனியாக மேற்கொள்ள வேண்டும். கதிர் அடிக்க பயன்படுத்தும் இடங்களை முழுமையாக சுத்தப்படுத்தி அதன் பின் கதிரடித்தல், காயவைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

நன்றாக காயவைத்த விதைகளை புதிய சாக்குப்பைகளில் மட்டுமே சேமிக்க வேண்டும். அந்த மூட்டைகளின் மேல் ரகத்தை தெளிவாக தெரியும் படி எழுத வேண்டும். பல ரகங்கள் உள்ள நிலையில் மூட்டைகளை ரகம் வாரியாக பிரித்து தனித்தனி அறைகளில் வைக்க வேண்டும்.

கத்தரிப்பு பணி

கத்தரிப்பு பணிக்கு முன்னதாக எந்திரங்களை முழுமையாக சுத்தம் செய்ய வேண்டும். கத்தரிப்பு எந்திரத்தை பயன்படுத்தும் போது முதலில் வெளி வரும் நெல் விதைகளில் அரை மூட்டையை விதைக்காக பயன்படுத்தாமல் கழிவு நெல்லுடன் சேர்க்க வேண்டும்.

மேலும் இந்த பணியின் போது வயல்மட்ட நெல் அதிக அளவில் கீழே சிந்தாமல் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு சிதறும் நெல்களை கழிவு நெல்லுடன் சேர்த்து அகற்ற வேண்டும். விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள் விதை உற்பத்தி தொடர்பான சந்தேகங்களுக்கு அருகில் உள்ள விதை சான்று உதவி இயக்குனர் அல்லது கோவை தடாகம் சாலையில் உள்ள விதை சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்பு இயக்ககத்தை நேரில் அணுகி தெரிந்து கொள்ளலாம்

**தகவல்:- விதைசான்று இயக்குனர், விதை மற்றும் அங்ககசான்று துறை, கோவை.**

## ஆடுகளை தாக்கும் நீல நாக்கு நோயும்-தடுப்பு முறைகளும்

தமிழகத்தில் வளர்க்கப்படும் ஆடுகளை தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று நீலநாக்கு நோய். தென்மேற்கு பருவமழை முடிந்ததும் இந்நோய் ஆடுகளை தாக்குகிறது.

**நீல நாக்கு நோய்**

இந்த நோயால் பாதிக்கப்பட்டு இறக்கும் ஆடுகளின் நாக்கு நீலநிறமாக மாறிவிடுவதால், நீல நாக்கு நோய் என்று அழைக்கப்படுகிறது. ஒருவகை நச்சுயிரியால் ஏற்படும் தொற்று இல்லாத நோய் இதுவாகும். க்யூளிகாய்டெஸ் என்ற சிறிய கொசு போன்ற பூச்சி கடியால் இந்த நோய் ஆடுகளுக்கு பரவுகிறது. இந்த பூச்சிகள் மழைக்காலங்களில் வெகுவாக இனப்பெருக்கம் செய்வதால் நீலநாக்கு நோய் மழை காலத்தில் வேகமாக பரவுகிறது.

இந்தியாவில் 1963-ம் ஆண்டு நீல நாக்கு நோய் கண்டறியப்பட்டது. இந்த நோய் ஆடு, மாடுகளை தாக்கினாலும், ஆடுகளில் அதுவும் குறிப்பாக செம்மறி ஆடுகளை தான் அதிக அளவில் பாதிக்கிறது. திருச்சி கருப்பு, சென்னை சிவப்பு, மாண்டியா போன்ற ஆட்டினங்களையும், கலப்பின செம்மறி ஆடுகளையும் இந்நோய் தாக்குகிறது.

**நோய் பரவுதல்**

க்யூளிகாய்ட்ஸ் என்ற கொசு போன்ற பூச்சு கடிப்பதால் நோய் தாக்கப்பட்ட ஆடுகளில், இருந்து மற்ற ஆடுகளுக்கு இந்த நோய் எளிதாக பரவுகிறது. இந்த நோய் பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு அதிக காய்ச்சல், மூக்கில் ரத்தத்துடன் கூடிய சளி வடிதல், வாய், உதடு, ஈறுகள், நாக்கு ஆகிய இடங்களில் வீக்கம் கண்டு புண் உண்டாகும்.

சில சமயங்களில் நாக்கு தடித்து நீல நிறமாக மாறிவிடும். கால் குளம்புகளும், தோலும் சேருமிடத்தில் வீக்கம் ஏற்பட்டு ஆடுகள் நொண்டி, நொண்டி நடக்கும். இந்த நோயால் கழுத்து தசைகள் பாதிக்கப்படுவதால் ஆடுகளின் கழுத்து ஒரு பக்கமாக சாய்ந்து காணப்படும். பொதுவாக அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் இந்த நோய் பாதிப்பு காணப்படுகிறது.

**தடுப்பு முறைகள்**

நோய் கண்ட ஆட்டை தனியாக பிரித்து பராமரித்து உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். அரிசி, கம்பு, கேழ்வரகு ஆகியவற்றில் கஞ்சி காய்ச்சி கொடுக்க வேண்டும். வெயிலில் மேய்ச்சலுக்கு விடக்கூடாது. இரவு நேரங்களில் ஆடுகள் அடைக்கும் இடத்தை சுற்றி நீர் தேங்காமல் பார்த்து கொள்ள வேண்டும். இடை போடுமிடத்தை தினசரி மாற்றி காற்றோட்டமாகவும், ஈரமில்லாமலும் இருக்க செய்ய வேண்டும்.

க்யூளிகாய்டெஸ் என்ற பூச்சி கடியில் இருந்து ஆடுகளை பாதுகாக்க வேப்பம் புண்ணாக்கு புகை போட வேண்டும். ஆட்டின் பற்களை உப்பு நீர் அல்லது 1 லிட்டருக்கு 1 கிராம் பொட்டாசியம் பர்மாங்கனேட் கலந்த நீரில் தினமும் 2 அல்லது 3 முறை கழுவ வேண்டும். பூச்சிக்கொல்லி மருந்து, ஒட்டுண்ணி மருந்துகள் தெளிக்க வேண்டும். இந்நோய் தாக்கப்பட்ட ஆடுகளுக்கு கால்நடை பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட தடுப்பூசியை போடுவது சிறந்தது.